# අග්‍රාමාත්‍ය කාර්යාලය
## பிரதம அமைச்சர் அலுவலகம்
## Prime Minister's Office

# 2025

## වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
### வருடாந்த செயற்திறன் அறிக்கை
### ANNUAL PERFORMANCE REPORT

# வருடாந்த செயற்திறன் அறிக்கை

# 2025

## பிரதம அமைச்சர் அலுவலகம்


| | |
|---|---|
| தொலைபேசி | : **011-2575317** |
| பெக்ஸ் | : **011-2575310** |
| மின்னஞ்சல் முகவரி | : info@pmoffice.gov.lk |
| இணையத்தளம் | : www.pmoffice.gov.lk |
| முகவரி | : **58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை கொழும்பு 07** |

## உள்ளடக்கம்

**1 நிறுவனம் தொடர்பான விபரம் ........................................................ 1**

1.1 அறிமுகம் ........................................................ 1

1.2 நிறுவனத்தின் தூரநோக்கும் செயற்பணியும் ........................................................ 1

1.3 முந்துரிமைகள் ........................................................ 2

1.4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு ........................................................ 3

**2 முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு ........................................................ 4**

2.1 செயலகம் ........................................................ 4

2.2 நிருவாகப் பிரிவு ........................................................ 6

2.3 அபிவிருத்திப் பிரிவு I ........................................................ 13

2.4 அபிவிருத்திப் பிரிவு II ........................................................ 26

2.5 கணக்குகள் பிரிவு ........................................................ 36

2.6 பொதுமக்கள் தொடர்புப் பிரிவு ........................................................ 37

2.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ........................................................ 42

2.8 ஊடகம் மற்றும் தொடர்பாடல் பிரிவு ........................................................ 45

2.9 சட்டப் பிரிவு ........................................................ 48

**3.ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன் ........................................................ 50**

3.1 நிதிச் செயற்திறன் கூற்று ........................................................ **50**

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று ........................................................ 51

3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று .......... 52

**4. செயலாற்றுகை சுட்டி .......... 53**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயல் திட்டத்திற்கு இணங்க) .......... 53

**5. நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை .......... 68**

5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை சுட்டிகள் .......... 68

5.2. நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான பூகோள இலக்குகளையும் சுட்டிகளையும் விரிவாக இனங்காணுதல் .......... 79

**6. மனித வளங்கள் பற்றிய குறிப்பு .......... 86**

6.1 ஆளணி முகாமைத்துவம் .......... 86

6.2 ஊழியர்களின் மிகை அல்லது பற்றாக்குறை நிறுவனத்தின் செயலாற்றுகையை பாதிக்கும் விதம் .......... 86

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி .......... 87

**7 இணக்கப்பாட்டு அறிக்கை .......... 92**

7.1. இணக்கப்பாட்டு அறிக்கை .......... 93

**8. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் .......... 99**

8.1 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் .......... 99

# 1 நிறுவனம் தொடர்பான விபரம்

## 1.1 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த பிரதம அமைச்சர் அலுவலகமானது, அரச கொள்கைகளுக்கு இணங்க பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடையும் நிமித்தம் தேவையான வழிகாட்டலையும், ஒருங்கிணைப்பையும், தலைமைத்துவத்தையும் வழங்குகின்றது.

அவ்வாறே, இன்றைய சவால்களுக்கு விரைவில் தீர்வுகாண்பதற்கும், மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல், நாட்டின் அபிவிருத்திப் பணிகளை பயனுறச்செய்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதிலும், மக்கள் மைய அணுகுமுறையின் மூலம் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை நிலைபேறான முறையில் அடைந்துகொள்ளத் தேவையான பங்களிப்பையும், வழிகாட்டலையும் சிறந்த ஒருங்கிணைப்பையும் வழங்குவதிலும், உலகளாவிய பரஸ்பர உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பங்களித்தல் போன்றவை பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மூலம் மேகொள்ளப்படுகிறது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 17வது பிரதம அமைச்சராகவும், இலங்கையின் மூன்றாவது பெண் பிரதம அமைச்சராகவும் கௌரவ பிரதம அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 18 தொடக்கம் பணியாற்றி வருகின்றார்.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கும் செயற்பணியும்

❖ **தூரநோக்கு**

“சுதந்திரமும், இறைமையும், சௌபாக்கியமும் நிறைந்த ஓர் இலங்கை”

❖ **செயற்பணி**

"இலங்கை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட வெளிநாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் என்பவற்றுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணி வளர்த்து ஒரு சிறந்த அரச பொறிமுறைக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குதல்."

## 1.3 முந்துரிமைகள்

- அரசாங்கத்தின் கொள்கைகளையும் மற்றும் தீர்மானங்களையும் செயற்படுத்துவதற்காக அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் வசதிகளைச் செய்துகொடுத்தல்.
- தேசிய பொருளாதார செயல்முறையினை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய தலையீடுகளை மேற்கொள்ளுதல்.
- பொருத்தமானவாறு சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களில் மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் நேரடித் தலையீடுகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செய்தல்.
- கௌரவ பிரதம அமைச்சரின் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரின் முன்முயற்சியின் கீழ் நடைபெறும் பல்வேறு கூட்டங்களினதும் மற்றும் கலந்துரையாடல்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றத்தை பின்னூட்டம் செய்தல்.
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பைப் பேணி பதில்களைத் தயாரித்தல்
- கௌரவ பிரதம அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சரின் கடமைப் பொறுப்புகளுக்குரிய இராஜதந்திர உறவுகளைப் பேணி வளர்க்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சருக்கு பொதுமக்களால் அனுப்பப்படும் முறையீடுகளையும், மனக்குறைகளையும் உரிய அறிவுறுத்தல்களுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி, முறையாகப் பின்னூட்டல்களை மேற்கொண்டு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் கலந்து கொள்ளும் அரச மற்றும் தேசிய விழாக்களையும், விஷேட நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து நடத்துதல். அத்துடன் அவை தொடர்பாக ஊடகங்களுக்கு அறிவித்தல்.
- தேசிய விழாக்கள், சமய விழாக்கள் மற்றும் சமூக நல சேவைகள் என்பவற்றை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்துதல்.

# 1.4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு




*மேலதிகச் செயலாளர் (நியதிச்சட்ட அலுவல்கள்) பதவியில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர், மேலதிகச்செயலாளர் (அபிவிருத்தி I) என கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ளார்.

# 2 முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1 செயலகம்

பிரதம அமைச்சரின் செயலாளருக்கு பிரதம அமைச்சரால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள் அதேபோல் பிரிவுத் தலைவர்களுக்கும், ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினருக்கும் பிரதம அமைச்சரின் செயலாளரினால் நேரடியாக வழங்கும் உத்தரவுகள் என்பவற்றைப் பிரதம அமைச்சரின் அலுவலக கட்டமைப்பில் உள்ள பதவிகளில் மேல்நிலையிலிருந்து கீழ்நிலை வரை (செங்குத்தாகவும்) மற்றும் பிரிவுகளுக்கு இடையில் (கிடையாகவும்) அறிவிப்பதன் ஊடாக சகல பிரிவுகளுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பை பேணிச்செல்வதும், அந்தக் கட்டளைகளுடன் தொடர்பான நடவடிக்கைகளை பயனுள்ளதாக செயற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை மேற்கொள்ளுதல் உள்ளடங்கலாக பின்வரும் பணிகள் இந்த பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒவ்வொரு பிரிவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றிய இலக்குகள் உகந்த முறையில் அடையப்பட்டுள்ளனவா என்பதுபற்றி உறுதிசெய்வதற்கான கண்காணிப்பும் முன்னேற்ற மீளாய்வும்

- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சட்ட ஏற்பாடுகளின் பிராகரம் சாட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றத் தேவையான நேரடி மற்றும் மறைமுக கடமைகளை நடைமுறைப்படுத்துதல்.

- சனாதிபதி செயலகம், அமைச்சரவை அலுவலகம், பொதுத் திறைசேரி, தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பன உள்ளடங்கலாக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் வெளி அரச நிறுவனங்கள் அனைத்திற்குமான ஒரு கேந்திர ஒருங்கிணைப்பு அலகாக தொழிற்படுதல்

- தற்போது காணப்படும் முறைமைகளை மிகவும் துல்லியமான மற்றும் வெளிப்படையான முறைமைகளாக மாற்றி, வினைத்திறன்வாய்ந்த மிகவும் பயனுள்ள ஒரு பொறிமுறைக்குத் தேவையான புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் முற்கூட்டிய நிர்வாகம், வினைத்திறனான ஆட்சி , இணைக்கப்பாட்டு நிர்வாகம் (AAA), வியாபார செயல்முறைகளை மீளத் திட்டமிடுதல் (BPR) போன்ற கருவிகளைப் பயன்படுத்தி அலுவலக முறைமைகளை நவீனமயப்படுத்தி அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களைத் தயாரித்தல்.

- உள்ளக கணக்காய்வுப் பிரிவு, சட்டப் பிரிவு மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் என்பவற்றினால் சுட்டிக்காட்டப்படும், இதற்கு மேலும் பின்பற்றவேண்டிய சட்ட விதிகளிலும், விதிமுறைகளிலும் கவனம் செலுத்தி நல்லாட்சிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, மிகவும் துல்லியமான முறைமைகளைத் தாபித்தல்.

- கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளர் ஆகியோரினால் இராஜதந்திர/வெளிநாட்டு பிரமுகர்கள் ஆகியோருடன் நடத்தப்படுகின்ற கலந்துரையாடல்களை / சந்திப்புகளை ஒருங்கிணைத்தல்.

- அமைச்சரவை நியமித்த கௌரவ பிரதம அமைச்சருடைய பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையிலான குழுக்களின் செயற்பாட்டின் நிமித்தம் உரிய நிறுவனங்களுடனும் பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் பிரிவுகளுடனும் சரியான முறையில் ஒருங்கிணைந்து தேவைப்படும் சந்தர்ப்பங்களின்போது குழு அறிக்கைகளைத் தயாரித்தல்

- பிரதம அமைச்சரின் செயலாளருக்கு நேரடியாக அனுப்பப்படுகின்ற மின்னஞ்சல்கள், வட்ஸ்அப் (WhatsApp) செய்திகள், தொலைநகல் செய்திகள் மற்றும் கடிதங்கள் என்பவற்றுக்கு உடனடியாக பதிலளித்தல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு கருத்துக்களையும் பின்னூட்டல்களையும் பெறுதல் மற்றும் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல்.

- பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் கீழ் உள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNDP) இணைந்த சிட்ரா சோஷல் இனோவேஷன் லேப் (CITRA Social Innovation Lab) இல் புதிய தொழில்நுட்பம் மற்றும் விஷேட நிபுணத்துவ அறிவு, நெகிழும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அந்தந்த தலைப்புகளின் கீழ் பல்வேறு துறைகளில் டிஜிட்டல் பரிவர்த்தனை முதல் தரவுகளை மையமாகக் கொண்ட முடிவுகளை எடுத்தல் மற்றும் தொடர்ச்சியான செயல்முறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் நிமித்தம் மிகவும் துரிதமான மற்றும் பயனுள்ள ஒரு அரச பொறிமுறையை உருவாக்கத் தேவையான மனித வளத்திற்குப் பயிற்சியளிப்பதற்கு மற்றும் வழிகாட்டிகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 2.2 நிருவாகப் பிரிவு

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயற்றிறனை உயர் தரத்தில் பேணிச்செல்வதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதியுடன் பயன்படுத்த தேவையான நிர்வாக ரீதியான, பராமரிப்பு பணிகள் மற்றும் செயல்பாட்டு முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியன இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இந்தப் பிரிவின் மூலம் பின்வரும் முன்னுரிமை வரம்புகளுக்குரிய செயற்பாடுகள் துணைப் பிரிவுகளாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 2.2.1 மனித வள முகாமைத்துவ மற்றும் நிருவாக உப பிரிவு

மனித வளங்கள் முகாமைத்துவ மற்றும் நிருவாக உப பிரிவானது பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயற்பாடுகளைச் சிறப்பாக உறுதிப்படுத்துவதுடன் விரிவான நிருவாக ரீதியான செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூறும் ஒரு பிரிவாகும். அதனடிப்படையில், ஆளணி தொடர்பான அறிக்கை முகாமைத்துவம், ஒழுக்காற்று செயற்பாடுகளை முன்கொண்டு நடாத்தல், தினசரி தபால்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான மனிதவள செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட தினசரி நிருவாகச் செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தகவல் அறியும் சட்டத்திற்குரிய நடவடிக்கைகள், ஆவணக்காப்பகம் மற்றும் தகவல் முகாமைத்துவம், இணைய வசதிகள் உள்ளிட்ட தொடர்பாடல் சேவைகளைப் பேணிச் செல்லுதல் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டுத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ **மனித வளங்கள் அபிவிருத்தி**

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் அறிவையும், திறன்களையும், மனோபாவத்தையும் வளர்ப்பதன் மூலம் சேவையின் தரத்தை மேம்படுத்துதல், மற்றும் அலுவலகப் பணிகளின் செயல்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்த வாய்ப்புகளை வழங்குதல், முதலிய நோக்கங்களின் நிமித்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை அனுப்ப இந்தப் பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது.

உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அலுவலக உத்தியோகத்தர்களின் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பிற்புலங்களை உருவாக்கி அவர்களை ஊக்குவிப்பதற்கும், தொடர்ச்சியாக அபிவிருத்தி அடைந்து வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறந்த சேவையை வழங்குவதற்கான பணிச்சூழலை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வினைத்திறன் மிக்க அரச சேவையை வழங்குவதற்கான வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டு பயிற்சிகள் ஊடாக அலுவலக உத்தியோகத்தர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை போலவே திறன் விருத்திக்கும், பரஸ்பர கற்றலையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதன் ஊடாக சர்வதேச உறவுகளை ஏற்படுத்தத் தேவையான சூழலைக் உருவாக்குவதற்கும் இந்த பயிற்சிகள் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

அதன்படி, 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் 43 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள்/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் / செயலமர்வுகளுக்கும் மற்றும் 18 வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள்/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் / செயலமர்வுகளுக்கும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தில் உற்பத்தித்திறன் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துதல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்திலுள்ள வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதைப் போன்றே உள்ளக மற்றும் வெளியக சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் சேவைகளை வழங்குதல் என்ற நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு அலுவலக உற்பத்தித்திறனை மேம்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அலுவலக முறைகளை டிஜிட்டல் மயப்படுத்துவதன் ஊடாக களஞ்சிய முகாமைத்துவம், வாகன முகாமைத்துவம், கோவைகள் முகாமைத்துவம், அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் தீர்மானங்களை பின்னூட்டல் செய்தல் மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு தகவல் கட்டமைப்பொன்று தாயரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக அலுவலக செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடனும், வினைத்திறனாகவும், உற்பத்திறனுடனும் நிறைவேற்றுவதன் ஊடாக ஒட்டுமொத்த உற்பத்தித் திறனையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் மனிதவள முகாமைத்துவக் கட்டமைப்பைத் தயாரித்தல், வெளிநாட்டு விடுமுறை தரவுக் கட்டமைப்பைப் பேணிச் செல்லுதல் மற்றும் அலுவலக நடவடிக்கைகளை

டிஜிட்டல் மயப்படுத்துதலுடன் தொடர்புடைய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு டிஜிட்டல் கையொப்பத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

❖ **ஆவணக்காப்பக செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துதல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உப கிளையின் பங்களிப்பில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஆவணக்காப்பகத்திற்கு கோவைகள் முகாமைத்துவக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் ஆவணக்காப்பகத்தில் ஒரு கோவையைக் கோரும்போது வினைத்திறனான வகையில் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு பயனர் நட்புரீதியான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதாகும் என்பதுடன், அதன் மூலம் ஆவணக்காப்பகத்தில் கோருகின்ற கோவைகளை இலகுவாக கண்டறியக் கூடியதாக உள்ளது.

தற்போது ஆவணக்காப்பகத்தில் 7000 கோவைகள் காணப்படுவதுடன் அவை இத்தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்தம் ஒவ்வொரு கிளைகளிலிருந்தும் வருகின்ற கோவைகளும் இத்தரவுத் தளத்தில் சேர்க்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே, டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட ஒரு ஆவணக்காப்பகத்தை உருவாக்கும் நோக்குடன் தற்போது ஆவணக்காப்பகத்தில் பேணப்பட்டுவருகின்ற கோவைகள் தரவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், ஆவணங்களைக் களஞ்சியப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் இலகுவாக இருப்பதுடன், கோவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான காலமும் குறைவடையும்.

## 2.2.2 வழங்கல் சேவைகள் உப பிரிவு

பிரதம அமைச்சர் அலுவலகத்தினதும் அதன் வளாகத்தில் அமைந்துள்ள கட்டடிடங்களது பராமரிப்பு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், அவற்றை மறுசீரமைத்தல், பேணிச் செல்லுதல் மற்றும் மின்சார இணைப்பை தொடர்ச்சியாக வழங்குவதற்காக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் இப்பிரிவின் கடமைகளாகும். அவ்வாறே பிரதம அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு, ஊடகப் பிரிவு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் தடையின்றி தமது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான வசதிகள் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றது.

பிரதம அமைச்சரதும் பணியாட்டொகுதியினரதும் போக்குவரத்து வசதிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அலுவலகத்திற்குச் சொந்தமான அனைத்து அரச வாகனங்களதும் தகவல்கள் மற்றும் சாரதிகளது தகவல்கள் உள்ளிட்ட விரிவான தரவுக் கட்டமைபொன்றைப் பேணிச் செல்லுதல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

பிரதம அமைச்சரது அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியின் பூந்தோட்டங்களை திட்டமிடுதல், மரங்களைப் பாதுகாத்தல் மற்றும் பூந்தோட்டங்களைப் பராமரித்தல் செயற்பாடுகள் இந்த உப பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், நில வடிவமைப்பு கம்பனியுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அனைத்து அலுவலக வளாகங்களதும் துப்பரவு சேவைகளை வழங்குவோரின் செயற்பாடுகளையும் நிருவகிக்கும் செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவின் ஊடாக 2025.01.01 ஆந் திகதி தொடக்கம் 2025.12.31 ஆந் திகதி வரை கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**வழங்கல் சேவைகள் அலகு**

- குழுமத்தில் உள்ள வாகனங்களது பராமரிப்பு மற்றும் அவற்றை இற்றைவரைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.
- வாகனங்களைத் திருத்தவேண்டிய சந்தர்ப்பங்களில் உள்ளூர் பிரதிநிதிகளிடம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்குத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் வெளியார் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் தொடர்பான பெறுகைச் செயற்பாடுகளுக்கு கணக்குப் பிரிவிற்கு அனுப்புதல்.
- வாகன வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் என்பனவற்றை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளுதல்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப ஆளனியினர் மற்றும் சாரதிகளுக்கு பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்.

**பராமரிப்பு அலகு**

- சிவில் பொறியியல் பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்புகள்
- மின்சார பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்புகள்
- வளிச்சீரக்கி இயந்திர பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்புகள்
- தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அலகின் மூலம் மேற்கொண்ட பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுபார்ப்புகள்

### 2.2.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உப பிரிவு

அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், நிறுவன செயல்முறைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு பிரதம அமைச்சர் அலுவலகம் நடவடிக்கை எடுக்கின்றது. மேலும், பணிகளை திறமையாகவும், எளிதாகவும் மேற்கொள்ளும் நிமித்தம் உள்ளக ரீதியாக தயாரித்த மென்பொருள் முறைமைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு புதிய தகவல்சார் தொழில்நுட்பப் பிரயோகங்கள் சோதிக்கப்படுவதும் அதன் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், துல்லியமான தகவல் பரிமாற்றத்தை உறுதிசெய்வதற்கும் சைபர் அச்சுறுத்தல்களை நிவர்த்திசெய்யகூடிய வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அனைத்து தரவு முறைமைகளுக்கும் சைபர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு தொடர்ந்து அவை கண்காணிக்கப்படுகின்றன.

அதனடிப்படையில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உப பிரிவின் ஊடாக 2025.01.01 தொடக்கம் 2025.12.31 ஆந் திகதி வரை கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இற்றைவரைப்படுத்திய தொழிற்பாட்டுக் கட்டமைப்புடன் கூடிய புதிய சேவைபெறுநர் கணனிக்கு மாற்றுதல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சிரிமதிபாய வளாகம் மற்றும் அலரி மாளிகை வளாகம் என்பனவற்றின் சைபர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு பயனர் அணுகல் முறைமையொன்றை (Active Directory) தாபித்தல் நடவடிக்கைகளை பரீட்சார்த்த ரீதியில் நடைமுறைப்படுத்துதல், இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய சைபர் பாதுகாப்பு மத்திய நிலையத்துடன் (NCSOC) இணைத்தல் மற்றும் ஆயுட்காலம் (EoL) முடிவுற்ற ஊடுருவலுக்கு எதிரான முதல்நிலை பாதுகாப்பு தீச்சுவர் (Perimeter Firewall) இற்கு புதிய தீச்சுவர் (Firewall) இயந்திரத்தை தாபித்தல்.
- பிரதம அமைச்சர் அலவலகத்தில் பயன்படுத்தப்படும் தகவல் கட்டமைப்புகளது சைபர் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு வெப் பாதுகாப்பு தீச்சுவர் ஒன்றை (Web Application Firewall) தாபித்தல்.
- தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலெக்ட்ரோனிக் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பிற்கும் (DMS) மற்றும் இலெக்ட்ரோனிக் களஞ்சியம் (E- Store) கட்டமைப்பிற்கும் தேவையான விசேட அம்சங்களை சேர்த்தல் மற்றும் ஆரம்ப பராமரிப்பு (Perfective Maintenance) நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- சட்டரீதியான ஆவணங்களை உள்ளடக்குவதற்கு ஏற்புடைய விதத்தில் அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் தீர்மானங்களைப் பின்னூட்டல் செய்யும் இலெக்ட்ரோனிக் கட்டமைப்பில் (CDFup) நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பிரதம அமைச்சர் அலுவலகத்தை கடதாசியற்ற ஒரு அலுவலகமாக மாற்றும் செயற்பாட்டில் தற்போதுள்ள இலெக்ட்ரோனிக் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பு (DMS), இலெக்ட்ரோனிக் சொத்து முகாமைத்துவக் கட்டமைப்பு (AMS) மற்றும் இலெக்ட்ரோனிக் போக்குவரத்து முகாமைத்துவக் கட்டமைப்பு (VMS) ஆகிய தரவுத் தளங்களை பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், பயனர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பவற்றிற்காக கட்டமைப்பை நவீனமயப்படுத்துதல், அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் டிஜிட்டல் கையொப்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- ஒரு முன்னோடித் கருத்திட்டமாக பத்து உத்தியோகத்தர்களுக்கு கையடக்க தொலைபேசி செயலி மூலம் உயிரியளவியல் தரவுகளின் அடிப்படையில் ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் அந்த நோக்கத்திற்காக இலெக்ட்ரோனிக் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை (DMS) உருவாக்குதல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் இலெக்ட்ரோனிக் ஆவண முகாமைத்துவக் கட்டமைப்பு (DMS), இலெக்ட்ரோனிக் சொத்து முகாமைத்துவக் கட்டமைப்பு (AMS) மற்றும் இலெக்ட்ரோனிக் போக்குவரத்து முகாமைத்துவக் கட்டமைப்பு (VMS) ஆகிய தரவுத் தளங்களை ஏனைய அரச நிறுவனங்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிப்பதற்கு லங்கா அரச கிளவுட் (LGC) க்கு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். தற்போது சனாதிபதி அலுவலகம், அமைச்சரவை அலுவலகம் மற்றும் சபாநாயகர் அலுவலகம் ஆகியவற்றுக்கு ஏற்கனவே DMS கட்டமைப்பை அணுகுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன.
- சொத்து முகாமைத்துவ கட்டமைப்பை, பொருட்சுற்றாய்வு நடவடிக்கைகளின்போது மிகச் சிறப்பான வகையில் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் QR குறியீட்டினைப் பயன்படுத்தி இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பிரிவிலும் ஒன்லைன் ஊடாக விடுமுறை விபரங்களை உள்ளடக்கும்பொருட்டு இலெக்ட்ரோனிக் மனித வள முகாமைத்துவ (HRM) மென்பொருள் கட்டமைப்பானது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.
- அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற மாநாட்டு மண்டபங்கள் என்பனவற்றை ஒன்லைன் ஊடாக ஒதுக்குவதற்கு மென்பொருள் கட்டமைப்பொன்று நிருமாணிக்கப்பட்டு வருகிறது.

- உத்தியோகபூர்வ கடித கொடுக்கல் வாங்கல்களுக்குப் பாதுகாப்பான மற்றும் நியமங்களுக்குட்பட்ட மின்னஞ்சல் கட்டமைப்பொன்றை தாபித்தல், ஆவண முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பை விருத்தி செய்யும் நோக்குடன் Microsoft 365 பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கொண்டுவரும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறன.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் (IT Procurment) கொள்வனவுகளுக்கு தொழிநுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிபாரிசுகளை வழங்குதல்
- பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இ-சனத்தொகை (e-Population), இ-காணி (e-Land), இ-பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்களை வழங்குதல் கட்டமைப்பு (e-BMD) மற்றும் இ-பதிவேடு (e-title) தகவல் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டன.
- ஒன்லைன் கூட்டங்களுக்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.
- அரச உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்காக மென்பொருள் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- அரச நிறுவனங்களுக்கு வருகை தரும் சேவை பெறுநர்கள்/உத்தியோகத்தர்கள் ஆகியோரை நிர்வகிக்க இலெக்ட்ரோனிக் நுழைவு முகாமைத்துவ (Gate Pass) மென்பொருள் அமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.
- வழங்கல் சேவைப் பிரிவுக்காக இலெக்ட்ரோனிக் கோரிக்கை முகாமைத்துவ (Complaint Management) மென்பொருள் கட்டமைப்பொன்றை உருவாக்கப்பட்டு வருகிறது.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளம் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.
- கௌரவ பிரதம அமைச்சரின் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை விமானப் படையின் உதவியுடன் சைபர் பாதுகாப்பு கணக்காய்வொன்று நடத்தப்பட்டுவருகிறது.
- கணனி, சேவை கணனி, கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி வலையமைப்பின் பொதுவான பராமரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், மின்னஞ்சல் கணக்குகளை வழங்குதல் மற்றும் அவற்றின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அனுமதிப்பத்திரம் மற்றும் பராமரிப்பு சேவை ஒப்பந்தங்களை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல், சைபர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய மூலோபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் பொதுவான கடமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.3 அபிவிருத்திப் பிரிவு I

அரச கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு கௌரவ பிரதம அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம், பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்பொருட்டு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல், ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல் மற்றும் வசதிகளை வழங்குதல் ஊடாக இந்நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பினை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

அதனடிப்படையில் 2025.01.01ஆந் திகதி தொடக்கம் 2025.12.31 ஆந் திகதி வரை அபிவிருத்தி I பிரிவின் ஊடாக கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- **இலங்கை சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுத்தல் மற்றும் அத்தகைய சம்பவங்களுக்கு உடனடி துலங்கல்களைக் காட்டுதல் தொடர்பில் வினைத்திறனான பொறிமுறையொன்றினைத் தயாரித்தல்.**

  இலங்கை சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுத்தல் மற்றும் அத்தகைய சம்பவங்களுக்கு உடனடி துலங்கல்களைக் காட்டுதல் தொடர்பில் வினைத்திறனான பொறிமுறையொன்றினைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கு கௌரவ பிரதம அமைச்சரால் மூவர் அடங்கிய நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவினால் பாடசாலைத் துறைக்குரிய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் தேசிய, மாகாண மற்றும் தனியார் கல்வி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அந்த அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் மற்றும் தகவல்களை ஆராய்ந்து, பாடசாலை கல்வித் துறையுடன் தொடர்புடைய இலங்கை சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுத்தல் மற்றும் அத்தகைய சம்பவங்களுக்கு உடனடி துலங்கல்களைக் காட்டுதல் தொடர்பில் வினைத்திறனான பொறிமுறையொன்றினைத் தயாரிப்பதற்குரிய மூவர் அடங்கிய நிபுணத்துவக் குழுவின் விதப்புரைகள் அடங்கிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையானது 2025.06.12ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவ்வறிக்கையின் பிரதியொன்று பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சிற்கும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சிற்கும் அனுப்பப்பட்டது.

❖ **களனி, முதுன்எலவில் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியின்னொரு பகுதியில் விஷ்ணு கோவில் நிருமாணிக்கப்பட்டமை தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள்.**

களனி, முதுன்எலவில் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒரு காணித் துண்டில் ஒரு விஷ்ணு கோவில் நிருமாணிக்கப்பட்டமை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் இற்றைக்கு ஏறத்தாழ 10 வருடங்களாக காணப்படுகின்றதெனினும், அது தொடர்பில் எந்தவித சாதகமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை தொடர்பில் கௌரவ பிரதம அமைச்சரின் கவனம் செலுத்தப்பட்டதுடன், முறையான அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்ட இந்த காணித் துண்டுக்கு உரியதாக அரசிற்கு அறவிடப்படவேண்டிய கட்டணம் காணப்படுவதால் , இந்த விடயம் தொடர்பில் உரிய அனைத்து தரப்பினரதும் பங்கேற்பிலான அமைச்சரவை உப குழுவின் மூலம் விடயங்கள் ஆராயப்பட்டு அமைச்சரவைக்கு விதப்புரைகளை வழங்குவதற்காக குறித்த நிறுவன தரப்பினர் பிரதிநித்துவம் செய்யக்கூடிய வகையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்கும், பரிந்துரைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் கௌரவ பிரதம அமைச்சரால் 2025.10.21 ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 2025.10.27 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ **இலங்கையின் தேசிய நீர் வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல்**

தற்போது வலுவிலுள்ள இலங்கையின் தேசிய நீர் வளங்கள் கொள்கையை திருத்தியமைப்பதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக “தேசிய நீர் வளங்கள் கொள்கையை திருத்தஞ் செய்தல்” என்ற தலைப்பில் கௌரவ பிரதம அமைச்சரால் 2025.06.18 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் கௌரவ பிரதம அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இலக்கம் அமப/25/1065/802/017 மற்றும் 2025.06.23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன விடயப் பொறுப்பு அமைச்சரின் தலைமையில் மற்றும் இன்னும் 04 கௌரவ அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழு மற்றும் அந்த அமைச்சரவை உப குழுவின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு பிரதம அமைச்சரின் செயலாளரது தலைமையில் மற்றும் இன்னும் 05 அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்ட

குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, தயாரிக்கப்படுகின்ற புதிய நீர் வளங்கள் கொள்கை மற்றும் அந்த கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையை விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன கௌரவ அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு மேலும் அதன் மூலம் கட்டளை விதிக்கப்பட்டுள்ளது.

❖ **கொழும்பு, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் மழைநீர் முறையாக வடிந்தோடாததாலும், களனி நதி பெருக்கெடுத்ததாலும் ஏற்பட்ட அனர்த்த நிலைமையை நிர்வகிக்கவும், கொலன்னாவ நகரத்தை அபிவிருத்தி செய்யவும் கௌரவ பிரதம அமைச்சர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு**

இலக்கம் அமப/25/1064/802/007-1 மற்றும் 2025.07.01 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மழைநீர் முறையாக வழிந்தோடாமை மற்றும் களனி கங்கை பெருக்கெடுக்கின்ற காரணத்தாலும் கொழும்பு, கம்பஹா மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் ஏற்படும் அனர்த்த நிலைமைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கொலன்னாவை நகர அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பல கலந்துரையாடல் அமர்வுகள் நடத்தப்பட்டதுடன், அதில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- மழைநீர் முறையாக வடிந்தோடாததாலும், களனி கங்கை பெருக்கெடுப்பதாலும் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலையைக் கட்டுப்படுத்த, கொழும்பு, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் களனி கங்கையின் இருபுறமும் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

- கொலன்னாவை வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான 06 அபிவிருத்தி மூலோபாயத் துறைகளின் கீழ் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கி ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

❖ **2025.11.27 ஆம் திகதி நாட்டைத் தாக்கிய திட்வா சூறாவளி மற்றும் இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள்**

மேற்கூறிய அனர்த்த நிலைமையின் கீழ் வீழ்ச்சியடைந்துள்ள மக்கள் வாழ்க்கையையும் பொருளாதாரத்தையும் இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக அரசாங்கத்தின் விரைவான நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்தும் ஐக்கிய நாடுகள் சபை போலவே சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் மனிதாபிமான உதவி மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை முறையாக பகிர்ந்தளிப்பதற்குமான பொறிமுறைக்குரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அனர்த்த நிலைமை காரணமாக பாதுகாப்பற்ற மற்றும் ஆபத்துகளை எதிர்கொண்ட குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அவர்களின் தேவைகளை அடையாளம் கண்டு பொருத்தமான வசதிகளை வழங்குவதற்காகவும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழ் காணப்படும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை நடத்துதல், பொருத்தமான கருத்திட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

❖ **திட்வா சூறாவளியுடன் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தநிலை காரணமாக மேல் மாகாணத்தில் ஒன்றுசேர்ந்துள்ள கழிவுகளை முகாமைசெய்தல்**

மேல் மாகாணத்திற்குள் சாதாரண நிலைமைகளின் கீழ் ஒன்றுசேர்கின்ற கழிவுகளுக்கு மேலதிகமாக திட்வா வெள்ள அனர்த்த நிலை காரணமாக பெருமளவில் ஒன்றுசேர்ந்துள்ள கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளைக் குறைப்பதற்காக அக்கழிவுகளை முறையாக அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு வரும் முகமாக கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் 2025.12.04 ஆம் திகதி கூட்டமொன்று நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு அரசியல் பிரதிநிதிகளும் அரசு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றியதுடன், அங்கு முன்வைக்கப்பட்ட விடயங்களின்படி பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக பல்வேறு இடங்களில் குவிந்துள்ள கலப்புக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்த வேண்டியிருப்பதால், அதற்கான குறுகிய கால உடனடி நடவடிக்கையாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால்

தற்போது அடையாளம் காணப்பட்டு விடுவிக்கப்பட்ட கெரவலப்பிட்டியில் உள்ள 05 ஏக்கர் நிலத்தை, சம்பந்தப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு அடுத்த 03 வாரங்களுக்கு எந்தவித கட்டணமும் வசூலிக்காமல் பயன்படுத்தவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அனுமதி வழங்குதல். இந்த முடிவை செயல்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகியன தங்களது உடன்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

- மேல் மாகாணத்திற்குள் தற்போது கலப்பு கழிவுகள் எதிர்பார்க்காதவாறு அதிக கொள்ளளவில் உருவாகின்றதென்றும் மற்றும் அக்கழிவுகளை அகற்றுவதற்கு போதியளவில் பொருத்தமான இடம் இல்லையென்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டமையால், அக்கழிவுகளை பயனுள்ளவகையில் முகாமை செய்வதற்கு இருக்கின்ற இன்னுமொரு பொருத்தமான தீர்வாக இருக்கின்ற கெரவலபிட்டியவில் காணப்படும் வெஸ்டர்ன் பவர் தனியார் நிறுவனத்தின் (Western Power (Pvt) Ltd) செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச்சென்று மேற்குறிப்பிட்ட கலப்புக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்து தேசியக் கட்டமைப்புடன் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலுச்சக்தி அமைச்சின் செயலாளருக்கு பிரதம அமைச்சரின் செயலாளரினால் கடிதம் மூலம் அறிவித்தல்.

- வெள்ளப்பெருக்கு நிலைமை குறைவடைந்ததைத் தொடர்ந்து ஒன்றுசேர்ந்துள்ள கலப்புக் கழிவுகளின் அளவு அதிகரித்துச்செல்வதைக் கருத்தில் கொண்டு, குறித்த கழிவுகளை விரைவாகவும் முறையாகவும் சேகரிக்கவேண்டுமென்றபடியால், அடுத்த 03 வாரங்களுக்குள் மேற்குறிப்பிட்ட கழிவுகளை அகற்றும் பிரிவிற்கு கழிவுகளை கையேற்கும் நடவடிக்கைகளை தினமும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் (SLLDC) மாலை 7.30 மணி வரை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்கமைய குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் அந்த சேகரிக்குமிடத்திற்குக் கழிவுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- தற்போது பாதுகாப்பு மத்திய நிலையங்கள் ஊடாகச் சேகரிக்கப்படும் உணவுக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தும் வகையில் அவற்றைத் தனித்தனியாக சேகரித்தல் மற்றும் மருத்துவக் கழிவுகளையும் (Medical Waste / Pharmaceutical waste) தனித்தனியாக சேகரிப்பதற்கும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடவடிக்கை எடுத்தல்.

- மேலே குறிப்பிடப்பட்ட சேகரிக்குமிடத்திற்கு 03 வார காலத்திற்குள் ஒன்றுசேரும் கலப்பு கழிவுகளை முறையாக நிர்வகிப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கான குறிப்பிட்ட வேலைத்திட்டமொன்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் தயாரித்தல்.

❖ **பாடசாலை சிறுவர்களுக்கான பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்**

இந்நாட்டிலுள்ள மாணவர் சமுதாயத்திற்கு செறிவூட்டப்பட்ட அரிசியைப் பயன்படுத்தி போசாக்கான ஒரு வேளை உணவை வழங்குதல் தொடர்பில் பல்வேறு அரச நிறுவனங்கள் இணைந்து செயற்படுகின்றன. செறிவூட்டப்பட்ட அரிசியின் ஊடாக பாடசாலை சிறுவர்களது போசாக்குத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யும்பொருட்டு ஏற்படுகின்ற அழுத்தங்கள் தொடர்பில் மென்மேலும் ஆராய்தல் மற்றும் அது தொடர்பில் பொறுப்புவாய்ந்த அரச நிறுவனங்களிடையே சரியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன கௌரவ அமைச்சர் அவர்களது கோரிக்கையின் பேரில் 2025.04.07 ஆந் திகதி இந்த கலந்துரையாடல் கௌரவ பிரதம அமைச்சரது தலைமையில் நடாத்தப்பட்டது.

அதனடிப்படையில் பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செறிவூட்டப்பட்ட அரிசிப் பயன்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பான ஆய்விற்காக உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP), ஐக்கிய நாடுகள் சபை (UN), பில் மற்றும் மிலிண்டா கேட்ஸ் (Bill & Melinda Gates) போன்ற அமைப்புகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும் மேற்குறித்த நிறுவனத்தின் (Impact Assessment) பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் செறிவூட்டப்பட்ட அரிசியை பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்படுத்துதல் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

❖ **கௌரவ பிரதம அமைச்சரது இராஜதந்திரச் சந்திப்புகளை ஒருங்கிணைப்புச் செய்தல்**

<u>வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடன் இடம்பெற்ற சந்திப்புக்கள்</u>

நாடுகளுக்கிடையே இருதரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகள், அபிவிருத்தி ஒத்துழைப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றம் செய்யும் நோக்கில்,

கௌரவ பிரதம அமைச்சர் சவுதி அராபி, ருவான்டா குடியரசு, இந்தோனேசியா, செக் குடியரசு, கம்போடியா, பிலிப்பீன், வத்திக்கான், பலஸ்தீன், பிரான்ஸ், நேபாளம், எரித்திரியா அரசு, உஸ்பெகிஸ்தான் குடியரசு, யோர்தான் இராச்சியம், கஸகஸ்தான் குடியரசு, பூட்டான் இராச்சியம், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, ஒஸ்ரியா, சீனா, கொரியா, அமெரிக்க ஐக்கிய இராச்சியம், கியுபா, நெதர்லாந்து, கசகஸ்தான் மற்றும் கனடா ஆகியவை உள்ளடங்கலாக பல்வேறு நாடுகளது தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் இராஜதந்திர சந்திப்புகள் இடம்பெற்றதுடன், அந்தச் சந்திப்புக்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாறே இலங்கையை பிரிதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடன் கௌரவ பிரதம அமைச்சர் மேற்கொண்ட சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

<u>பல்வேறு சர்வதேச அமைப்புகளுடனான சந்திப்புகள்</u>

கருத்திட்டச் சேவைகளுக்காக ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNOPS) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பிரதிநிதிகளுடனும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பிரதிநிதிகளுடனும் நடத்தப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம் (IMF), ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA), Global Green Growth Institute (GGGI), ஐரோப்பிய ஒன்றியம் (EU), பிம்ஸ்டெக் அமைப்பு (BIMSTEC), நிப்பொன் மன்றம் (Nippon Foundation), நல்லாட்சிக்கான தேசிய மத்திய நிலையம் (NCGG), சர்வதேச வர்த்தக மத்திய நிலையம் (ITC) போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID), உலக வங்கி (World Bank) மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், கேட்ஸ் அறக்கட்டளையின் உலகளாவிய அபிவிருத்திப் பிரிவின் தலைவர், ஜப்பானின் WE CARS இன் தலைவர், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பிராந்தியப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணப்பாளர் நாயகம், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு (ICRC), போன்ற

அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**<u>பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அபிவிருத்தி I பிரிவினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இராஜதந்திர சந்திப்புகள்</u>**

| # | விடயம் | முதலாம் தவணை | இரண்டாம் தவணை | மூன்றாம் தவணை | நான்காம் தவணை | கூட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்குதல் | 23 | 27 | 23 | 17 | 90 |
| 2 | பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமை தாங்குதல் | 4 | - | 2 | - | 6 |
| 3. | பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் தலைமை தாங்குதல்; | 1 | 2 | 1 | - | 4 |
| 4. | வேறு சந்திப்புகள் | 4 | 1 | 2 | - | 7 |

- **வெளிநாட்டு பிரதிநிதிகள் அனுப்பிய வாழ்த்துக் கடிதங்களுக்கு பதில் கடிதங்களை அனுப்புதல்**.

<u>கௌரவ பிரதம அமைச்சரின் நியமனத்திற்காக</u>

நோர்வேயின் பிரதம அமைச்சர், மோல்டா பிரதம அமைச்சர், இஸ்ராயேல் பிரதம அமைச்சர், ஸ்லோவேனிய பிரதம அமைச்சர் ஆகியோரால் அனுப்பப்பட்ட வாழ்த்துக் கடிதங்களுக்கு பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

<u>சுதந்திர தினத்திற்காக</u>

இந்தியா, பூட்டான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்களால் சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பிய வாழ்த்துக் கடிதங்களுக்கு பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

❖ **வெளிநாட்டு அரச தலைவர்களுக்கு அவர்களின் நியமனங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளின் போது வாழ்த்துக் கடிதங்களை அனுப்புதல்**

ஐக்கிய அமெரிக்காவின் உப சனாதிபதி பெல்ஜியம் பிரதம அமைச்சர், லெபனான் பிரதம அமைச்சர், பெலருஸ் பிரதம அமைச்சர் மற்றும் ஆஸ்திரிய சான்ஸ்லர், துருக்கி குடியரசின் புதிய உப சனாதிபதி மற்றும் செக் குடியரசின் புதிய பிரதம அமைச்சர், நோர்வே குடியரசின் புதிய பிரதம அமைச்சர், லிதுவேனியா குடியரசின் புதிய பிரதம அமைச்சர், ஜமைக்காவின் புதிய பிரதம அமைச்சர்/பாதுகாப்பு அமைச்சர்/ பொருளாதார அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர், மக்கள் சீனா குடியரசின் இராஜ்ய சபையின் புதிய பிரதம அமைச்சர், சவுதி அரேபியாவின் புதிய பிரதம அமைச்சர், கிராமிய கல்விக்கான யுனெஸ்கோ சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தின் புதிய பணிப்பாளர் ஆகியோருக்கு அவர்களின் நியமனங்களுக்கு வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. டிரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசின் புதிய பிரதம அமைச்சர், பாலஸ்தீனத்தின் புதிய உப சனாதிபதி, கனடாவின் புதிய பிரதம அமைச்சர் மற்றும் புதிய பாப்பரசர் XIVஆம் லியோ திருத்தந்தை அவர்கள் ஆகியோரின் நியமனங்களைப் போலவே உருகுவே சனாதிபதியின் பதவியேற்பு விழாவிற்கு அழைக்கப்பட்டமை தொடர்பாக மற்றும் பிரதம அமைச்சரின் பிரான்ஸ் விஜயம் தொடர்பாக யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகத்திற்கு வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மேலும் மொனாக்கோ இராச்சியத்தின் புதிய இராஜங்க அமைச்சர், ருமேனியாவின் புதிய பிரதம அமைச்சர், கொரியா குடியரசின் புதிய பிரதம அமைச்சர், ருவாண்டா குடியரசின் புதிய பிரதம அமைச்சர், ஜோர்டானின் ஹஷிமைட் இராச்சியத்தின் புதிய பிரதம அமைச்சர், மற்றும் பாதுகாப்பு அமைச்சர், புருண்டி குடியரசின் புதிய பிரதம அமைச்சர், இந்திய குடியரசின் புதிய துணை சனாதிபதி ஆகியோருக்கு அவர்களின் நியமனங்களுக்கு போலவே இளவரசி மஹா சாரி சிரிந்தோரா அவர்களினால் சுகாதார முகாமின் நிறைவு விழாவிற்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

திட்வா சூறாவளி தொடர்பாக இலங்கைக்கு இரங்கல் செய்திகளை அனுப்பிய மக்கள் சீன குடியரசின் பிரதம அமைச்சர், வியட்நாம் சோசலிச குடியரசின் பிரதம அமைச்சர், பிஜி குடியரசின் பிரதம அமைச்சர், மியான்மர் குடியரசின் பிரதம அமைச்சர், கம்போடியா இராச்சியத்தின் பிரதம அமைச்சர், பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பிரதம அமைச்சர், ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் கடிதங்களை அனுப்பப்பட்டன.

சவூதி அரேபியாவின் தேசிய தினத்தை முன்னிட்டு அந்நாட்டின் பிரதம அமைச்சருக்கு வாழ்த்துக் கடிதம் வழங்குதல், பதவி விலகும் ஜப்பான் பிரதம அமைச்சர் திரு. இஷிபா

ஷிகெருவின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் கடிதம் வழங்கியமை, 41வது சார்க் சாசனக் கொண்டாட்டத்திற்கு வாழ்த்துக் கடிதம் வழங்கியமை மற்றும் திட்வா சூறாவளியின் நிலைமைகளின்போது இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிக்கு சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர்/ பிரதம அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

❖ **வெளிநாட்டு அரச தலைவர்களின் இறுதிச் சடங்குகளுக்கான இரங்கல் கடிதங்களை அனுப்புதல்**

மொனாகோ அரசின் முன்னால் அமைச்சரொருவரின் இறுதிச் சடங்கிற்கு இரங்கல் தெரிவிக்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

❖ **இராஜதந்திர சந்திப்புகள் தொடர்பாக பின்னாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்**

கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பிரதம அமைச்சரின்; செயலாளர் ஆகியோரால் 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களில், பின்னாய்வு செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் அதன் தற்போதைய நிலைமை தொடர்பாக பின்னாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ **அமைச்சரவைக் குறிப்புகளைத் தயாரித்தல்**

கௌரவ பிரதம அமைச்சரின் ஜெர்மன் ஆசிய-பசுபிக் வர்த்தக மாநாட்டின் அழைப்பின் பேரில் 2025.03.26 ஆம் திகதி தொடக்கம் 2025.03.30 ஆம் திகதி வரை ஜெர்மனிக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம், யுனெஸ்கோ அமைப்பின் அழைப்பின் பேரில் 2025.03.30 ஆம் திகதி முதல் 2025.04.02 ஆம் திகதி வரை பிரான்சின் பாரிஸ் நகரில் மேற்கொண்ட நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம், BIMSTEC அமைப்பின் அழைப்பின் பேரில் 2025.04.02 ஆம் திகதி முதல் 2025.04.04. ஆம் திகதி வரை தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு மேற்கொண்ட இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பான அமைச்சரவைக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன.

சீன சனாதிபதியின் அழைப்பின் பேரில் உலகளாவிய தலைவர்களின் பெண்கள் சம்மேளனத்துடன் இணைந்ததாக (Global Leaders' Meeting on Women) 2025.10.12 ஆம் திகதி தொடக்கம் 2025.12.15 ஆம் திகதி வரை கௌரவ பிரதம அமைச்சர் சீனாவிற்கு மேற்கொண்ட நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பான அமைச்சரவைக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன.

- **கௌரவ பிரதம அமைச்சருக்கு கிடைக்கப்பெறும் அழைப்புகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

கௌரவ பிரதம அமைச்சருக்கு சர்வதேச அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளால் விழாக்கள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் மற்றும் நட்புறவு கலந்துரையாடல்கள் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காகப் பெறப்படும் அழைப்புகள் தொடர்பாக, அவர் பங்குகொள்வது பொருத்தமா அல்லது பொருத்தமற்றதா என்பது குறித்து வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சிடமிருந்து அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கௌரவ பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களில் ஆற்றப்படவேண்டிய விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்களில் உள்ளடக்கபடுகின்ற விடயங்களை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சிடமிருந்தும் மற்றும் மத்திய அமைச்சின் ஊடாகவும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

அரச நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் போன்றவற்றுக்கான உறுப்பினர் நியமனங்களுக்காக கௌரவ பிரதம அமைச்சரால் செய்யப்படும் பரிந்துரைகளை சனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்புதல், கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரையும் சந்திக்க வருகை தரும் சிறப்பு நபர்களைச் சந்தித்தல், அவர்களுடன் கலந்துரையாடி தொடர்புடைய கோரிக்கைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், கௌரவ பிரதம அமைச்சர் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சுக்களுடன் தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபானங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகளை பரிசீலனைசெய்து கௌரவ பிரதம அமைச்சரின் கையொப்பத்திற்காக அவற்றைச் சமர்ப்பிப்பதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

## 2.3.1 திட்டமிடல் உப பிரிவு

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் அறிக்கையிடுதல், வருடாந்த செயல்திட்டத்தைத் தயாரித்தல், அந்த திட்டத்தின் அடிப்படையில் காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த செயல்திறன் அறிக்கையை தயாரித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவது குறித்த செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல் மற்றும்

தேவைக்கேற்ப காலத்துக்கேற்ற தலைப்பின் ஊடாக ஒதுக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல், அவற்றின் பின்னரான செயல்பாடுகள் தொடர்பாக வழிநடத்தல் கண்காணிப்புகள் மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடல் ஆகியவற்றைக் உள்ளடக்கிய செயல்பாடுகளை இந்தப் பிரிவு மேற்கொள்கிறது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல்**

  நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயல்திட்டத்தைத் தயாரித்தல்**

  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பணிகள் மற்றும் வேலைத்திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உள்ளடக்கிய **2026** ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திட்டம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது.

- **2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திறன் அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தல்**

  2002.09.12 திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன் 204 பந்தியின் விதிகளின்படி தயாரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயல்திறன் அறிக்கையின் திட்டவரைவு 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் இறுதி அறிக்கை குறித்த தினத்திற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

- **2025 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்**

  அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களின் நிதியாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கை மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது சபைக்கு முன்வைப்பதற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆரம்ப கட்டத்திலிருந்து பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்ட செயற்குழுவிடம் சமர்ப்பிப்பது வரையிலான முழுப் பணிகளும் இந்தப் பிரிவின் மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. அதன்படி 2025 ஆம் ஆண்டிற்கான குறித்த முன்னேற்ற அறிக்கை உரிய திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் (2025/2026) உள்ளடங்கிய அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட செயற்குழுவின்போது ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக 2025/ 2026 ஆண்டுகளுக்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- **வருடாந்த செயல்திட்டத்தின் அடிப்படையிலமைந்த பௌதீக முன்னேற்றம் அடங்கிய காலாண்டு முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல்**

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அனைத்துப் பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவது முக்கியமாகும். அதன்படி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடங்கிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் கணக்காய்வுப் பிரிவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **விரிவான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்**

2024 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விரிவான முன்னேற்றங்களை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## 2.4 அபிவிருத்திப் பிரிவு II

தற்போதைய அரசாங்கத்தால் முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்ட அபிவிருத்திக்கு முக்கியமாகத் தேவையான டிஜிட்டல் மயமாக்கலைப் பாடசாலை கட்டமைப்பிற்குப் பயன்படுத்துவதற்காக டிஜிட்டல் கற்றல் முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தல்களுக்கமைய இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக 6-13 ஆம் தரம் வரையிலான கல்வியை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் செயற்படுத்துவதற்காக பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் செயலணியொன்று நிறுவப்பட்டுள்ளது. அந்த செயலணியின் மூலம் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை வெற்றியடையச் செய்வதற்குத் தேவையான கொள்கை முயற்சிகளை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து அடிப்படை நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டுதல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியன மேற்கொள்ளப்படுவதுடன் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவு II மூலம் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.1 கல்வியை டிஜிட்டல் மயமாக்குதலுக்குரிய செயல்பாடுகள்

இந்த செயல்முறையின் கீழ் 2025 யூன் மாதம் முதல் இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளை பல பிரிவுகளின் கீழ் பகுப்பாய்வு செய்யமுடியும்.

❖ **செயலணியின் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.**

| நடைபெற்ற திகதி | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் |
|---|---|
| 2025.07.02<br>2025.08.06<br>2025.09.03 | தற்போதைய சூழ்நிலையை மீளாய்வு செய்தல்: கல்வியில் ஏற்கனவே பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் வெற்றிகள் மற்றும் சவால்கள் குறித்து விவாதித்தல். |
| | புதிய தொழில்நுட்ப தீர்வுகளை அறிமுகப்படுத்துதல்: புதிய கற்றல் முகாமைத்துவக் கட்டமைப்புகள் (LMS), NEMIS, இணையத்தள பாடநெறிகள் அல்லது புதிய செயலிகள் (apps) ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கான கருத்துக்களைச் சமர்ப்பித்தல். |
| | ஆசிரியர் பயிற்சி: டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் அவசியத்தையும் மற்றும் |

| நடைபெற்ற திகதி | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் |
|---|---|
| | அதற்காக எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடுதல். |
| | இணைய வசதிகள்: பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் மற்றும் கணினிகளை பெற்றுக்கொடுத்தல் அல்லது மேம்படுத்துதல் பற்றி கலந்துரையாடப்பட்டது. |
| | நிதி மற்றும் கருத்திட்டங்கள்: டிஜிட்டல் மயமாக்கல் கருத்திட்டங்களுக்குத் தேவையான நிதியை எவ்வாறு பெற்றுகொள்வது என்பது பற்றி கலந்துரையாடுதல். |
| 2025.10.08 | டிஜிட்டல் மயமாக்கலின் கீழ் ஆசிரியர்களின் கற்பித்தல் திறமைகளை மேம்படுத்துதல் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிஜிட்டல் கற்பித்தல் முறைகளை அபிவிருத்தி செய்தல் குறித்து கலந்துரையாடப்பட்டன. |
| | டிஜிட்டல் கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்சியாக கொண்டுநடத்துவதற்காகப் பொருத்தமான தொலைக்கல்வி முறைகளைச் செயல்படுத்தவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. |
| | சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர் குழுக்களான மாற்றுத்திறனாளி மாணவர்கள் உட்பட ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய குழுக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது. |
| | NEMIS கட்டமைப்பின் வளர்ச்சி குறித்து கலந்துரையாடப்பட்டது. |
| 2025.12.09 | திட்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ள நிலைமையினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சரியான வழிமுறையொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. |
| | அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் போது மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உளவியல் ரீதியான முதலுதவிப் (Psychological First Aid - PFA) பயிற்சிகளை பயனுறுதியுடன் பயன்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது. |
| | தற்போது காணப்படுகின்ற அனர்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மிகவும் பயனுள்ள மற்றும் விரைவான தீர்மானங்களை எடுப்பதற்காக மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்றின் (Centralized Data System) தேவையின் அவசியம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. |

| நடைபெற்ற திகதி | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் |
|---|---|
| | டயலொக் (Dialog Axiata) நிறுவனத்தினால் தற்போதுள்ள தரவுகளை மத்தியப்படுத்துவதற்கு மற்றும் பொருத்தமான பயனர் இடைமுகத்துடன் (User Interface) கூடிய தகவல் தொழில்நுட்பத் தீர்வை வழங்குவதன் மூலம் கல்வி அமைச்சிற்கு உதவுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. |
| | அனைத்து ஆசிரியர்களும் முறையான உளவியல் முதலுதவி பயிற்சி பெறாதமையால், முன்னர் உள்ள பயிற்சி அமர்வுகளின் ஒளிப்பதிவு செய்யப்பட்ட காணொளி பதிவுகள் மூலம் அவர்களுக்குத் தேவையான புத்தாக்கப் பயிற்சியை (Refresher Training) வழங்க முடியும் என்று கலந்துரையாடப்பட்டதுடன் இத்தகைய பயிற்சி அமர்வுகளை ஒழுங்கமைப்பதற்கும் மற்றும் விநியோகிக்கவும் "ஈ-தக்சலாவ" (e-Thaksalawa) டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. |

❖ **செயலணியின் உறுப்பினர்களுக்கான செயலமர்வுகளை நடத்துதல்**

செயலணிக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில், Citra Lab நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மூலம் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் 2025.07.17 ஆம் திகதி செயலணியின் உறுப்பினர்களுக்கு கொள்கைத் திட்டமிடல், டிஜிட்டல் மயமாக்கல் குறித்த பயிற்சிச் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டதுடன் அவர்கள் உப குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அந்தக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிட்ட பெறுபேறுகளை எட்டுவதற்காக ஒப்படைக்கத்தகு அளிப்புகள் (Deliverables) வழங்கப்பட்டன.

❖ **மாற்றுத்திறனாளி மாணவர்களை டிஜிட்டல் மயமாக்கலில் ஈடுபடுத்துவது குறித்த செயலமர்வுகளை நடத்துதல்**

மாற்றுத்திறனாளி மாணவர்களின் கற்றல் செயல்முறையை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் அந்த மாணவர்களை வெற்றிகரமாக அதில் ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு மற்றும் இது தொடர்பான பொதுவான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு கல்வித் துறையுடன் தொடர்புடைய அரசு நிறுவனங்களான கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனங்கள் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்தச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. அங்கு, டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

என்றும், குறைபாடுகள் உடைய குழந்தைகள் குறித்த துல்லியமான புள்ளிவிவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும், அந்தப் பிள்ளைகளுக்கு பொருத்தமான வயதில் அடையாளம் காணக்கூடிய செயல்முறையை வலுப்படுத்துதலின் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

- **மாகாணங்களில் கல்வியை டிஜிட்டல் மயமாக்குதல் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்குதல்.**

செயலணி குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக மாகாண கல்விக் கட்டமைப்பில் அத்தியாவசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பிரதம அமைச்சரின் செயலாளரின் கோரிக்கைக்கமைவாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளரினால் டிஜிட்டல் ஸ்மார்ட் காட்சிப்பலகை, இணையத்தள இணைப்பு மீளமைத்தல் மற்றும் கல்வி அலுவலகங்களுக்கு டெஸ்க்டாப் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு 1640.75 மில்லியன் ரூபாவினை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் ஊடாக மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் முன்னேற்றம் பின்வருமாறு.

| இலக்கம் | மாகாணம் | கிடைத்த முழு ஏற்பாடுகள் (மில்லியன் ரூபா) | கொள்வனவு செய்த ஸ்மார்ட் காட்சிப்பலகைகளின் எண்ணிக்கை (Smart boards) | டெஸ்க்டாப்/லேப்டொப் கணினிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | வடமத்திய | 97 | 200 | 30 |
| 02 | தென் | 153 | 270 | 0 |
| 03 | மேல் | 374 | 481 | 314 |
| 04 | சப்ரகமுவ | 197.75 | 371 | 70 |
| 05 | கிழக்கு | 206 | 316 | 170 |
| 06 | வட | 67 | 67 | 0 |
| 07 | வட மேற்கு | 276 | 440 | 109 |
| 08 | மத்திய | 118 | 169 | 0 |
| 09 | ஊவா | 152 | 270 | 43 |
| **மொத்தம்** | | **1640.75** | **2584** | **736** |

கல்வியின் டிஜிட்டல் மாற்றத்திற்காக மாகாணங்களின் தயார்நிலை பற்றி ஆராய்ந்துபார்ப்பதற்காகப் பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்கள் பல்வேறு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் மாகாண கல்வி அலுவலகங்களுக்குச் சென்று கள விஜயங்களை மேற்கொண்டனர்.

| மாகாணம் | | மாவட்டம்/ வலயம் |
|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | ஹொரண கல்வி வலயம் |
| 2 | சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி கல்வி வலயம் |
| 3 | வட மாகாணம் | கிளிநொச்சி மாவட்டம், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் |
| 4 | கிழக்கு மாகாணம் | திருகோணமலை மாவட்டம், கந்தளாய் கல்வி வலயம் |
| 5 | ஊவா மாகாணம் | பதுளை மாவட்டம் |
| 6 | மத்திய மாகாணம் | கண்டி மாவட்டம் |
| 7 | வட மத்திய மாகாணம் | அனுராதபுர மாவட்டம், கெகிராவ கல்வி வலயம், பொலன்னருவை மாவட்டம் |
| 8 | தென் மாகாணம் | காலி மாவட்டம், மாத்தறை மாவட்டம், அம்பாந்தோட்டை மாவட்டம் |

மேலும், பதுளை மற்றும் கண்டி மாவட்டப் பாடசாலைகளின் தலா 48 பேரைக்கொண்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைக் கொண்ட இரண்டு குழுக்களுக்கு கல்வியை டிஜிட்டல் மயமாக்குவது குறித்த பயிற்சி செயமர்வுகள் நடத்தப்பட்டன.

- ***கல்வியை டிஜிட்டல் மயமாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட செயலமர்வுகள்***

| கூட்டங்கள் நடைபெற்ற திகதி | **செயலமர்வுகள்** தொடர்பான விடயங்கள் |
|---|---|
| **2025.10.31** | செயலணியின் உறுப்பினர்களுக்கான டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம் குறித்து நடத்தப்பட்ட செயலமர்வு |
| **2025.11.04** | மேல் மாகாண ஸ்ரீ ஜயவர்தனபுர வலயத்தில் மற்றும் சபரகமுவ மாகாண ஆசிரியர்களுக்கான NEMIS மென்பொருளின் பயன்பாடு குறித்து நடத்தப்பட்ட செயலமர்வு |
| **2025.11.13** | மேல் மாகாணத்தின் ஹோமாகம, நீர்கொழும்பு மற்றும் களுத்துறை கல்வி வலயங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான NEMIS மென்பொருளின் பயன்பாடு குறித்து நடத்தப்பட்ட செயலமர்வு |

கல்வியின் டிஜிட்டல் மாற்றம் தொடர்பாக பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்கள் குருநாகல், புத்தளம் மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் வடமேல் மாகாண கல்வி அலுவலகங்களுக்குச் சென்று அவதானிப்புகளை மேற்கொண்டதுடன் டிஜிட்டல் பாடத்திட்ட விருத்தி குறித்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திலும் பங்கேற்றனர்.

- **திட்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளபேருக்கு நிலைமை காரணமாக அனர்த்தங்களுக்கு உள்ளாகிய பாடசாலைகளுக்கு டிஜிட்டல் கல்வி உபகரணங்கள் விநியோகம்.**

திட்வா சூறாவளியால் ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தின் காரணமாக நாட்டில் உள்ள ஏராளமான பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைந்ததுடன், அவ்வாறு அழிவடைந்த டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் பழைய நிலைக்கு மீட்டெடுப்பதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறை சம்மேளனத்துடன் (FITIS) மேற்கொண்ட கலந்துரையாடலின் பெறுபேறாக OREL IT நிறுவனம் வட மத்திய மாகாணத்தின் 04 பாடசாலைகளுக்கு 10 டெஸ்க்டாப் கணனிகள், மத்திய மாகாண 03 பாடசாலைகளுக்கு 35 டெஸ்க்டாப் கணனிகள், மேல் மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு 15 டெஸ்க்டாப் கணனிகள் ஆகியவற்றை வழங்கியிருந்தன.

இங்கு பாதிப்புக்கு உள்ளான பல பாடசாலைகளின் மற்றும் தொலைக் கல்வி நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப மத்தியநிலையங்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் OREL IT நிறுவனத்தினால் இயங்கு நிலைக்கு கொண்டுவந்ததுடன், அதன் பின்னர் அந்த தகவல் தொழில்நுட்ப மத்தியநிலையங்கள் விரைவாக மீள இயங்கச்செய்து மாணவர்களிடம் கையளிப்பதற்கு OREL IT நிறுவனம் மற்றும் டிஜிட்டல் கல்வி மாற்றத்திற்கான செயலணி ஆகியன ஒன்றிணைந்து செயற்பட்டன.

இதேபோல், Techno City, Sense Micro, Creative Software ஆகிய நிறுவனங்களினால் திட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளில் நட்ட இழப்பு ஏற்பட்ட நாட்டின் பல்வேறு மாகாணங்களில் உள்ள 45 பாடசாலைகளுக்கு 275 கணினிகள், 04 டிஜிட்டல் பலகைகள், 15 கணினி நாற்காலிகள் மற்றும் 15 கணினி மேசைகளை வழங்குவதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக 19 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் 22 புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும், பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து Dialog மற்றும் Techno City ஆகிய நிறுவனங்களும் திட்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்ப மத்திய

நிலையங்களில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சிடம் தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்திருந்தன.

### 2.4.2 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் அலகு

- **அமைச்சரவை விஞ்ஞாபனம்/அமைச்சரவைக் குறிப்பு தொடர்பான பணிகள்**

கௌரவ பிரதம அமைச்சரால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனம்/அமைச்சரவைக் குறிப்புகளை திட்டவரைவாக தயாரித்து அமைச்சரவை அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பது வரையான செயல்முறைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் இந்த அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைய, 2025 சனவரி 01 ஆம் திகதி முதல் 2025 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பல்வேறு துறைகள் தொடர்பாக 39 அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. .

மேற்குறிப்பிட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் குறிப்புகளை ஆய்வுகளுக்குட்படுத்தி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிலிருந்து, பிரதம அமைச்சரின் செயலாளரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் குறித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கும் பணி இவ்வலகினால் மேற்கொள்ளப்படுகிறது.

- **அமைச்சரவை பத்திரங்களுக்கான சுருக்கக் குறிப்புகளைத் தயாரித்தல்**

அமைச்சரவைக் கூட்ட அமர்வுகளை நடத்துவதற்கு முன்னர் அமைச்சரவை அலுவலகத்தினால் வாரந்தோறும் கௌரவ பிரதம அமைச்சரின் கவனத்திற்காக அனுப்பப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைச் சாரம்சப்படுத்தி ஒரு கோவையொன்றைத் தயாரித்து கௌரவ பிரதம அமைச்சருக்கும் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைள் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கமைய, 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை 16 அமைச்சரவைப் பத்திரச் சுருக்கக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான தரவுத்தளத்தை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்**

அனைத்து அமைச்சுகளினாலும் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/குறிப்புகள்,

அவற்றுக்குரிய அவதானிப்புகள் மற்றும் தீர்மானங்களை ஸ்கேன் செய்து (Scan) தரவுத் தளத்தில் உள்ளடக்கி இற்றைப்படுத்துதல் இந்த அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

❖ **பாராளுமன்ற வினாக்களுக்குப் பதிலளித்தல்**

1. கௌரவ சனாதிபதி அவர்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் தொடர்பாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் பொது விவகாரங்கள் குறித்து 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான காலஎல்லைக்குள் கௌரவ பிரதம அமைச்சரிடம் கேட்கப்படுகின்ற வாய்மூல வினாக்கள் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

    - கௌரவ சனாதிபதி அவர்களின் விடயப்பரப்பின் எல்லையுள் வரும் சனாதிபதி அலுவலகத்திற்கு உரித்தாகின்ற விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட பதினைந்து (15) வாய்மூல வினாக்களுக்குரிய பதில்கள் வரைவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளன.
    - கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்பிற்குரிய பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு உரித்தாகும் விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட எட்டு (08) வாய்மூல வினாக்களுக்கு வரைவு பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
    - கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்பிற்குரிய கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரித்தாகும் விடயங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட நாற்பத்திரண்டு (42) வாய்மூல கேள்விகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. கௌரவ சனாதிபதி அவர்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பிற்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் தொடர்பாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் பொது விவகாரங்கள் குறித்து கௌரவ பிரதம அமைச்சரிடம் கேட்கப்படுகின்ற வாய்மூல விடைகள் எதிர்பார்க்கப்படாத வினாக்கள் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

    ❖ கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்பிற்குரிய பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு உரித்தாகும் விடயங்கள் குறித்து கேட்கப்பட்ட ஆறு (06) வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் வரைவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளன.

3. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை அடிப்படையிலான விடயங்கள் ஊடாக ஒவ்வொரு மாதமும் பாராளுமன்ற கூட்டங்கள் நடைபெறும் முதல் புதன்கிழமை கௌரவ பிரதம அமைச்சரிடம் வினாக்கள் வினவப்படும் சந்தர்ப்பத்தின் கீழ் வினவப்படும் நான்கு (04) வாய்மூல வினாக்களுக்கு பதில்கள் பெற்றுக்கொடுக்கப்படுகிறன. அதற்கமைய, 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில்

நாற்பது (40) வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் வரைவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளன.

4. பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் கௌரவ பிரதம அமைச்சரிடம் வினவப்பட்ட வினாக்களில் 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நான்கு (04) வினாக்களுக்காக சனாதிபதி அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பத்தில் கௌரவ பிரதம அமைச்சரிடம் வினவப்படும் வினாக்களின் கீழ் இரண்டு (02) வினாக்களுக்கு சனாதிபதி அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்குரிய பதில் வரைவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளன.

6. பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகள் தொடர்பான கேள்விகள் இரண்டிற்காக (02) சனாதிபதி அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ **பிரேரணைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்பித்தல்**

கௌரவ பிரதம அமைச்சரால் பாராளுமன்றத்தில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவுகள் தொடர்பான வரைவுகளைத் தயாரித்து பாராளுமன்றத்தின் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல் இந்தப் பிரிவின் மூலம் மேறகொள்ளப்படுகின்றன. அதற்கமைய 2025.01.01 முதல் 2025.12.31 வரை நான்கு (4) பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ **பாராளுமன்ற அறிக்கைகளைச் சபைபீடத்துக்கு சமர்பித்தல்**

கௌரவ சனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்பிற்குள் வரும் விடய குறிப்புகள் தொடர்பான அறிக்கைகள் பாராளுமன்ற சபைபீடத்துக்கு சமர்பிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களின்போது, விசேடமாக ஆண்டு அறிக்கைகள், செயல்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்குக் கூற்றுகள் ஆகியவற்றைப் பாராளுமன்ற சபைபீடத்துக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த காலப்பகுதிக்குள் கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் பதினெட்டு (18) வருடாந்த செயல்திறன் அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆறு (06) அறிக்கைகள் பாராளுமன்ற சபைபீடத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு.

- **செயல்திறன் அறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| i. | சனாதிபதி அலுவலகம் | - 2024 |
| ii. | அமைச்சரவை அலுவலகம் | - 2024 |
| iii. | அரசாங்க சேவை ஆணைக்குழு | - 2024 |
| iv. | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | - 2024 |
| v. | கணக்காய்வு சேவை ஆணைக்குழு | - 2024 |
| vi. | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | - 2024 |
| vii. | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | - 2024 |
| viii. | நிதி ஆணைக்குழு | - 2024 |
| ix. | நீதிச் சேவை ஆணைக்குழு | - 2023 |
| x. | டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | - 2022 |
| xi. | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | -2024/2025 |
| xii. | சனாதிபதி நிதியம் | -2024 |
| xiii. | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் | -2024 |
| xiv. | தேசிய திட்டமிடல் ஆணைக்குழு | -2024 |
| xv. | எல்லை நிர்ணய ஆணைக்குழு | -2024 |
| xvi. | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற குறைகேள் ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகம் | -2024 |
| xvii. | நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை | -2024 |
| xviii. | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (காலாண்டு செயல்திறன் அறிக்கை) | - 2024 |

- **பரிந்துரைகள்**

| | | |
|---|---|---|
| i. | நிதி ஆணைக்குழு | - 2025/2026 |

- **முன்னேற்ற அறிக்கை**

| | | |
|---|---|---|
| i. | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் | - 2024 |

- **119 (4)**

| | | |
|---|---|---|
| i. | நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை | -2024 |
| ii. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | -2024 |
| iii. | தேசிய கணக்காய்வு அலுவலகம் | -2024 |

## 2.5 கணக்குகள் பிரிவு

சட்ட ரீதியில் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் பொருட்டு சிறந்த மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவ மூலோபாயங்களை செயல்படுத்துவதும், சிறந்த நிதி அறிக்கையிடலை உறுதி செய்வதும் இந்தப் பிரிவின் முக்கியமான பொறுப்பாகும். அதன்படி இந்தப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றது.

- நிதித் திட்டமிடுகையும் மற்றும் வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடும்

- பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல், அந்த சொத்துக்களைப் பாதுகாத்தல், வருடாந்த பொருட் சுற்றாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களைப் பேணுதல்

- வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அரசாங்க ஊழியர்களின் முற்பண “B’ கணக்குகளின் எல்லைகளைப் பேணி முற்பணக் கணக்குகள் தொடர்பான வருடாந்த இணக்க அறிக்கைகளைத் தயாரித்தல்

- அரச கணக்காய்வு உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைந்து வருடாந்த கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களையும் ஒத்துழைப்பையும் வழங்குதல்.

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் சம்பளத்தைத் தயாரித்தல், முற்பணங்களையும் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்துதல் உள்ளடங்கலாக மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- அலுவலக வேலைக்குத் தேவையான நுகர்வுப்பொருட்களைக் கொள்வனவுசெய்தல் மற்றும் அந்தப் பொருட்கள் தொடர்பான இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

## 2.6 பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு பிரச்சினை தொடர்பாக ஒரு நிவாரணத்தை எதிர்பார்த்து கௌரவ பிரதம அமைச்சருக்கு அனுப்பப்படும் பிரேரணைகள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பன தொடர்பாக நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்தல், பொதுமக்களுக்கு அரச நிறுவனங்களின் மூலம் பயனுள்ள சேவையொன்றைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பிரச்சினைகளுக்கு விரைவாகப் பதிலளித்தல் ஆகியவற்றின் நிமித்தம் அந்தப் பிரச்சினைகளை உரிய அரச நிறுவனங்களுக்கு அனுப்பி இறுதிப் பதிலைப் பெற்றுக் கொடுக்கும் வரையில் அது தொடர்பாக பின்னூட்டல் செய்தல். பொதுமக்களினாலும், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் என்பவற்றினாலும் ஒப்படைக்கப்படும் மனுக்களை கௌரவ பிரதம அமைச்சர் சார்பாக ஏற்றுக்கொண்டு அவற்றுடன் தொடர்பான ஏனைய ஒருங்கிணைப்பு விடயங்களை மேற்கொள்ளல், தீர்த்துவைக்கப்படாதுள்ள பொதுமக்கள் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைப் பகுப்பாய்வு செய்து கிடைக்கின்ற பெறுபேறுகள், எடுக்கப்படும் தீர்மானங்கள் என்பவற்றை பொருத்தமான தரப்புகளுக்கு அனுப்புதல் முதலிய பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **முன்மொழிவுகள், கோரிக்கைகள்/மனக்குறைகள் என்பவற்றை அனுப்பவேண்டிய வழிமுறை**

முன்மொழிவுகள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை பயனுள்ள விதத்தில் கையாளும் பொருட்டு தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்பாடல் மூலோபாயங்கள் என்பன பயன்படுத்தப்படுவதால் ஏவரேனும் ஆளொருவருக்கு தனது கோரிக்கையை தபால் மூலம் அனுப்புவதற்கு மேலதிகமாக கீழே காணப்படும் தொடர்புகளின் ஊடாக இலத்திரனியல் வழியாக சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், அதற்குப் பொருத்தமான வகையில் துரித பதிலளித்தலும் மேற்கொள்ளப்படுகிறது.

**secretarypr@pmoffice.gov.lk**

[www.pmoffice.gov.lk](http://www.pmoffice.gov.lk) (Public grievances **வலைப்பக்க இணைப்பு)**

**+94 117481514**

**+94 71 999 7722**

- **குறுஞ்செய்திச் சேவைகள்**

அனுப்பப்படுகின்ற கோரிக்கைகள் / மனக்குறைகளுடன் கையடக்க தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், அவற்றிற்குரிய தொடர்பு இலக்கங்கள் (Reference Number) ஒரு குறுஞ்செய்தி மூலம் (SMS) வழங்கப்படும்.

- **2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.**

பொதுமக்களினால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு கோரிக்கையுடனும் தொடர்புடைய ஆவணங்கள் ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு, மென் பிரதிகளாக (Soft Copies) ஆவண முகாமைத்துவ முறைமையில் (Document Management System) சேமிக்கப்படும். இது எந்த நேரத்திலும் தகவல்களை சரிபார்த்து மீட்டெடுக்க உதவுகின்றது. அதன்படி, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

- **2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தப் பிரிவுக்குக் கிடைத்த கடிதங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு வகைப்படுத்தமுடியும்.**

1. **கிடைத்த ஊடகங்களுக்கு அமைவாக**

| # | ஊடகமூலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| i. | தபால் / நேரடியாக/ தொலைநகல் (வன் பிரதிகள்) | 27,172 |
| ii. | மின்னஞ்சல் மற்றும் whatsapp (மென் பிரதிகள்) | 10,140 |
| | **மொத்தம்** | **37,312** |

2. கோரிக்கைகளின் தன்மைக்கு ஏற்ப (புதிய கோரிக்கைகள்)

| # | ஆவணங்களின் வகை | சதவீதம் (%) |
|---|---|---|
| 1. | **வாடிக்கையாளர்கள் முகம்கொடுக்கும் பல்வேறு சிரமங்கள்** அரச ஊழியர்களுக்கும் மற்றும் பொலிஸாருக்கும் எதிரான முறைப்பாடுகள், அரச சேவை நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகள், பொதுமக்கள் பாதுகாப்பு, சூழல் மாசடைதல், போட்டிப் பரீட்சைகளை நடத்துதல்/பெறுபேறுகளை வெளியிடுதல்/ஆட்சேர்ப்பு முதலியவற்றில் ஏற்படும் தாமதங்கள் முதலியன | 22.4% |
| 2. | **ஊழியர்களின் கோரிக்கைகள்**<br>அரச/தனியார்/முப்படை சேவைகள்/ வெளிநாட்டிலுள்ள ஊழியர்கள் | 15.2% |
| 3. | **தொழில் கோரிக்கைகள்** | 13.8% |
| 4. | **கல்வி**<br>உயர்கல்வி, தொழிற்கல்வி, பாடசாலை விளையாட்டுக்கள், பாடசாலை வசதிகள் மற்றும் மாணவர்களை அனுமதித்தல், கல்வி சார்ந்த பொதுவான பிரச்சினைகள் | 9.1% |
| 5. | கௌரவ பிரதம அமைச்சருக்கு கிடைக்கும் வாழ்த்துச்செய்திகள், கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள். | 8.0% |
| 6. | **காணி சம்பந்தமான பிணக்குகள்**<br>விவசாய மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக, வீடுகளை நிர்மாணிப்பதற்கு, உரித்து உறுதிகள், உறுதிகள், அளவையிடுதல், எல்லைக் கற்களை இடுதல் | 6.0% |
| 7. | **நலன்புரி நன்மைகளுக்கான கோரிக்கைகள்**<br>அஸ்வெசும, சமுர்த்தி, ஊனமுற்றோரர், முதியோர், சீறுநீரக நோயாளிகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான உதவிகள், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் | 5.9% |
| 8. | **உட்கட்டமைப்பு வசதிகள்**<br>தண்ணீர்/மின்சாரம்/பாதைகள்/போக்குவரத்து/ தொடர்பாடல் | 3.5% |
| 9. | **வீட்டுக்கான தேவைகள்**<br>வீடு, வீடுகளைத் திருத்துதல் மற்றும் புதிய நிர்மாணங்கள் | 3.2% |
| 10. | **ஓய்வு பெறுதல்**<br>ஓய்வூதிய சம்பளம் மற்றும் பணிக்கொடை | 2.9% |
| 11. | சமய, கலாச்சார, கலை மற்றும் விளையாட்டுக்கள் | 2.0% |

| # | ஆவணங்களின் வகை | சதவீதம் (%) |
|---|---|---|
| 12. | கடன்களுக்கும் குத்தகைளுக்குமான நிவாரணக் கோரிக்கைகள் | 1.2% |
| 13. | **கைத்தொழில்**<br>கடற்றொழில்/சுற்றுலா/ தகவல் தொழில்நுட்பம் /கைத்தொழில் | 0.6% |
| 14. | **விவசாயம்**<br>தண்ணீர் பிரச்சினைகள், விதைகள், உரங்கள், கிருமிநாசினிகள் மற்றும் விஸ்தரிப்பு சேவைகள் | 0.5% |
| 15. | இலக்கம் 1 முதல் 14 வரை உள்ளடங்காத ஏனைய பிரச்சினைகள் | 5.7% |
| | **மொத்த எண்ணிக்கை** | **100%** |

❖ **பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு/மனக்குறைகளுக்கு விரைவில் பதிலளித்தல்/தீர்வுகாணும் பொருட்டு இப்பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

- **பொதுமக்களின் கோரிக்கைகள்/ மனக்குறைகளுக்கு விரைவில் பதிலளித்தல்/ தீர்வுகாணும் பொருட்டு நேரடி மேற்பார்வை உத்தியோகத்தர்களை நியமித்தல்**

  “2025 ஆம் ஆண்டுக்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் மாகாண சபை அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றிலிருந்து நேரடி மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வருடாந்த இடமாற்றம், உத்தியோகத்தர்கள் இடமாற்றம் போன்ற விடயங்கள் காரணமாக இவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட நேரடி மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மாறியிருப்பது அவதானிக்கப்பட்டமையால் நேரடி மேற்பார்வை உத்தியோகத்தர்களின் தகவல் கட்டமைப்பை இற்றைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  இந்த செயல்முறையின் மூலம் ஒவ்வொரு கோரிக்கையும் அந்தந்த நிறுவனங்களுக்கு Email வழியாக மட்டுமே அனுப்பப்படும். இதன் மூலம் பொருளாதார சிக்கனம் ஏற்பட்டுள்ளதுடன் அதன் மூலம் காகிதாதிகள் மற்றும் அஞ்சல் தொடர்பான செலவுகளில் சுமார் 50% த்தை சேமிக்கக்கூடியதாக இருந்தது.

- **இலக்கமுறைக் கையொப்பத்தைப் (Digital Signature) பயன்படுத்துதல்.**

இலக்கமுறைக் கையொப்ப (Digital Signature) முறைமையைப் பின்பற்றுதல் மற்றும் பிற டிஜிட்டல் மயமாக்கல் மேம்பாடுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் வினைத்திறன் மற்றும் பயனுறுதி அதிகரித்துள்ளது. அதேபோல் காகிதாதிகளுக்குரிய செலவுகளை பெருமளவில் குறைத்துக்கொள்ளவும் முடிந்தது. கடித வரைவுகளைச் சமர்பிப்பதற்கான வன் பிரதிக்குரிய பாவனை நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அந்தக் கடித ஆவணங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் இடவசதிகளைத் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. அதேபோல் கதிர்ப்படியெடு (Scan) செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களின் தகவல்களையும் தினசரி அடிப்படையில் காப்புநகல் (backup) எடுக்கும் வேலைத்திட்டத்தையும் தொழில்நுட்பப் பிரிவு செயல்படுத்தியுள்ளது.

- **மின்னஞ்சல் முகவரி மற்றும் வாட்ஸ்அப் இலக்கத்தைப் பயன்படுத்துதல்.**

கௌரவ பிரதம அமைச்சரிடம் பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் குறைகள் மற்றும் கோரிக்கைகளை மிகவும் வினைத்திறனுடன் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தொடர்பாடல் ஊடகம் மூலம் சமர்ப்பிக்கப்படும் மனக்குறைகள்/கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்படும்போது கடிதம் அனுப்பியவருக்கு அனுப்பப்படும் நகல் பிரதி மின்னஞ்சல்/வாட்ஸ்அப் வழியாகவும் அனுப்பப்படுகிறது. எனவே, தொடர்புடைய கடிதங்களை அஞ்சல் பாதை ஊடாக அனுப்புவதற்கு செலவாகும் காகிதாதிகள் செலவும் கணிசமான மட்டத்தில் குறைத்துக்கொள்ள முடிந்தமையால் கடதாசிப் பயன்பாடு குறைவான அல்லது இல்லாதிருக்கும் ஒரு பிரிவாக செயற்படுதல்.

- ❖ **அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பணியாட்டொகுதி முகாமைத்துவக் குழுவின் கடமைகளை மேற்கொள்ளுதல்**

அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பணியாட்டொகுதி முகாமைத்துவக் குழு என்ற தலைப்பில் கௌரவ சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு இணங்க இலக்கம் அமப/24/2276/801/010 மற்றும் 2024.12.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையிலான குழுவின் செயலாளர்/அழைப்பாளர் என்ற வகையில் பொதுமக்கள் தொடர்புப் பிரிவின் மேலதிக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பணிகள் பொதுமக்கள் தொடர்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச சேவையின் அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்குள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரிந்துரை செய்வதற்காக 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரை இருபத்துமூன்று (23) குழு அமர்வுகளும் ஒன்பது உபகுழு அமர்வுகளும் நடத்தப்பட்டு, பன்னிரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டுக்குள் 79,272 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவைக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பிரதம அமைச்சரின் செயலாளரால் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு ரீதியான மதிப்பீட்டு அறிக்கைகளைத் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் அனுப்புதல் மற்றும் அந்த நிறுவனங்களின் வழிகாட்டல்களுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கணக்காய்வு அலகினால் உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுகிறது.

| # | நிகழ்ச்சித்திட்டம்/ கூட்டங்கள் | நடைபெற்ற திகதி |
|---|---|---|
| 01 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு ரீதியான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்<br>• 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்<br>• 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்<br>• 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்<br>• 2025 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் | 2025.01.23<br>2025.04.23<br>2025.07.25<br>2025.10.23 |
| 02 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்<br>• 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்காக<br>• 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்காக<br>• 2025 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுக்காக<br>• 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்காக | 2025.02.18<br>2025.06.17<br>2025.09.16<br>2025.12.22 |
| | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை காலாண்டு ரீதியாக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் (மாதிரிப்படிவம் 6)<br>• 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்கான இணக்கப்பாட்டு அறிக்கையினை தயாரித்துச் சமர்பித்தல்<br>• 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான இணக்கப்பாட்டு அறிக்கையினை தயாரித்துச் சமர்பித்தல் | 2025.02.25<br>2025.06.30 |

| # | நிகழ்ச்சித்திட்டம்/ கூட்டங்கள் | நடைபெற்ற திகதி |
|---|---|---|
| 03 | • 2025 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுக்கான இணைக்கப்பாட்டு அறிக்கையினை தயாரித்துச் சமர்பித்தல்<br>• 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான இணைக்கப்பாட்டு அறிக்கையினை தயாரித்துச் சமர்பித்தல் | 2025.09.19<br>2025.12.22 |
| | உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்காய்வு அவதானிப்புகளை சிபாரிசுகளுடன் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அறிக்கையிடுதல் | |
| | • 2024 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைகள் மற்றும் வருமானங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2025.03.27 |
| | • வளிச்சீராக்கி இயந்திரத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான உள்ளகக் கணக்காய்வுப் பரிசீலனைகள் | 2025.03.28 |
| | • கொடுப்பனவு வவுச்சர்களைப் பரிசீலித்தல் – 2024 நவம்பர் மற்றும் டிசெம்பர் | 2025.01.28 |
| | • பதவிநிலை உத்தியோகத்தர்களின் தனிநபர் கோவைகளைப் பரிசீலித்தல் | 2025.02.13 |
| | • 2025 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைவான சம்பள மாற்றங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.04.28 |
| | • கொடுப்பணவு வவுச்சர்களைப் பரிசீலித்தல் - 2025 சனவரி | 2025.05.14 |
| | • கடமைப் பிரயாணங்களுக்காக வாகனங்களை ஒதுக்குதல் மற்றும் ஓட்டக் குறிப்புகளைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு | 2025.05.22 |
| | • 2025 ஆம் ஆண்டில் ஓய்வு பெறவுள்ள உத்தியோகத்தர்களின் தனிநபர் கோவைகளைப் பரிசீலித்தல் | 2025.05.24 |
| | • 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட புதிய சம்பள மாற்றங்களுக்கு அமைவாக சம்பளங்களைத் தயாரித்தல் மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேட்டைப் பராமரித்தல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை | 2025.05.30 |
| | • அரச நிறுவனங்களில் பெரும் செலவுச் சுமையான சொகுசு வாகனங்களை அரச பெறுகை நடைமுறைக்கு அமைவாக அகற்றுதல் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.06.11 |
| | • வைப்புப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் காலாவதியான வைப்புக்களின் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.07.08 |

| # | நிகழ்ச்சித்திட்டம்/ கூட்டங்கள் | நடைபெற்ற திகதி |
|---|---|---|
| 04 | • கொடுப்பனவு வவுச்சர்களைத் துல்லியமாகப் பரிசீலனை செய்தல் மற்றும் பெறுகை/ வருமானங்களைப் பரிசீலித்தல் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை (2025 சனவரி- யூன்) | 2025.07.08 |
| | • அலுவலக ஊழியர் சேவையினரின் தனிநபர் கோவைகளைப் பரிசீலித்தல் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.07.25 |
| | • 2025 மார்ச் கொடுப்பனவு வவுச்சர்களைத் துல்லியமாகப் பரிசீலனை செய்வது பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.08.02 |
| | • மூலதனச் செலவு மற்றும் பெறுகை நடைமுறைகள் பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.09.08 |
| | • அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதியினர் மற்றும் தற்போது உள்ள பணியாட்டொகுதியினர் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.09.10 |
| | • சம்பளக் கொடுப்பனவு பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை (Slip System) | 2025.09.11 |
| | • கொடுப்பனவு வவுச்சர்களைத் துல்லியமாகப் பரிசீலனை செய்வது பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை (2025 யூலை) | 2025.12.09 |
| | • வாகன விபத்துக்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை (2025 சனவரி தொடக்கம் ஆகஸ்ட்) | 2025.12.17 |
| | • பொதுமக்கள் தொடர்புப் பிரிவிற்குக் கிடைக்கின்ற கோரிக்கைகள்/மனக்குறைகள் பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.12.18 |
| | • Clean Sri Lanka தேசிய நிகழ்ச்சித்தித்திட்டத்திற்கு இணைவாக அரச நிறுவனங்களில் ஒழுங்கமைப்பைப் பராமரித்தலுக்காக செய்றி வாரத்தினை செயற்படுத்தல் பற்றிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை | 2025.12.18 |
| 05 | Risk Appetite Statement தயாரித்தல் | 2025.11.28 |
| 06 | அனர்த்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் (Preparation of Risk Assessment Form) | 2025.11.28 |
| 07 | 2026 ஆம் வருடத்திற்காக அனர்த்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் (Preparation of Risk Register) | 2025.11.28 |
| 08 | 2026 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | 2025.12.03 |

## 2.8 ஊடகம் மற்றும் தொடர்பாடல் பிரிவு

“வளமான நாடு அழகான வாழ்க்கை” என்ற கொள்கைக் கூற்றுக்கு இணங்க நாட்டினுள் மாற்றத்தை ஏற்படுத்த பொருளாதார மாற்றத்தையும் மற்றும் அதற்கு இணையாக சமூக மற்றும் தனிநபர் மனோபாவங்களில் மாற்றத்தையும் ஏற்படுத்துவது அத்தியாவசிய அம்சம் என அவதானிக்கப்படுகின்றது. மேலும் பல நெருக்கடிகளுக்கும் மற்றும் பல சவால்களுக்கும் முகம்கொடுத்துள்ள நாட்டை சரியான ஒரு பாதையில் பயணிக்கச் செய்வதற்குத் தேவையான காலத்திற்குகந்த நடவடிக்கைகளை எடுப்பதைத் தாமதியாது மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொதுமக்களை மையமாகக் கொண்டமைந்த ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்கள், முடிவுகள் மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் என்பன தொடர்பாக மக்கள் மத்தியில் சரியான மனோபாவத்தை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மக்களுக்கு சரியான தகவல்களை தொடர்பாடல் செய்வதற்கும் பிரதம அமைச்சரின் ஊடகப் பிரிவு நிதமும் தனது சேவையை வழங்கி வருகின்றது. மேலும் ஊடகங்களின் பாவனை தொடர்பாக நிதமும் கவனம் செலுத்தி பின்னூட்டல் செய்வதன் ஊடாக பொய்யான தகவல்களுக்குப் பதிலாக சரியான தகவல்களை மக்கள்மயப்படுத்துவதையும் இந்தப் பிரிவு மேற்கொள்கின்றது. கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள், இராஜதந்திர சந்திப்புகள், பொது வைபவங்களில் கலந்துகொள்ளல், பாராளுமன்ற செய்திகள் மற்றும் தீர்மானமிக்க கலந்துரையாடல்கள் என்பன பற்றிய தகவல்கள் அடங்கலாக எல்லா தகவல்களையும் மற்றும் பிரச்சாரங்களையும் உரிய நேரத்தில் ஊடகங்களில் ஒளிபரப்புச்செய்தல், ரூபவாஹினி, செய்திப்பத்திரிகைகள், வானொலி, இணையத்தளம், இணையத்தள ப்லொக் மற்றும் ஊடகங்கள் என்பவற்றுக்கு செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் செய்திகளை பின்னூட்டல் செய்தல் முதலிய கருமங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போல் பல ஊடகங்களின் ஊடாக வெளியாகும் பொய்யான மற்றும் முழுமையற்ற செய்திகள் தொடர்பாக அவதானித்து அவற்றை சரிபடுத்துதல், விஷேட தினங்கள் மற்றும் வைபவங்கள் என்பவற்றை முன்னிட்டு கௌரவ பிரதம அமைச்சரின் வாழ்த்து செய்திகளை அனுப்புதல் உள்ளிட்ட பணிகளும் இந்த ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக வைபவங்களை ஏற்பாடு செய்தல், ஊடக அழைப்புகள், வைபவங்களுக்குரிய ஆரம்ப கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பல்வேறு நிகழ்வுகளின் வீடியோ காணொளிகள் மற்றும் புகைப்படங்களைச் சேமித்து வைத்து தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வெளியிடுதலும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறே அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி, இணையத்தளங்கள் ஆகியவற்றில் வெளியிடப்படும் செய்திகளை காப்பகப்படுத்துதல் மற்றும் செய்திக் கோப்புகளைத் தயாரித்தலும் ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**2025.01.01 தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான செயற்பாடுகள்**

| | ஊடகப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்ட கூட்டங்கள், வைபவங்கள் மற்றும் பிற பணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிரதம அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரவுகளை காப்பகப்படுத்தி சேமித்தல்<br>I) புகைப்படங்கள் அடங்கிய கோவைகள்<br>II) வீடியோக்கள் அடங்கிய கோவைகள் | 596<br>555 |
| 02 | செய்திகளையும் விஷேட நிகழ்ச்சிகளையும் தயாரித்தல், ஊடகங்களுக்கு செய்திகளை வெளியிடுதல் | 404 |
| 03 | விஷேட ஆவணங்களை தயாரித்தல் (செய்திப்பத்திரிகைகள்) | 06 |
| 04 | ஊடக அணவல்களுக்கு ஊடகங்களை அழைத்தல் | 21 |
| 05 | பிரதம அமைச்சரின் செய்திகளை வெளியிடுதல் | 77 |
| 06 | பிரதம அமைச்சரினால் ஆற்றப்படுகின்ற உரைகளுக்கு தகவல்களை வழங்குதல் | 25 |
| 07 | பிரதம அமைச்சர் கலந்து கொள்ளும் விஷேட நிகழ்வுகளுக்குரிய முன் கண்காணிப்பு அலுவல்கள் மற்றும் ஆரம்ப கலந்துரையாடல்கள் | 405 |
| 08 | வெளிநாட்டு தூதுவர்களையும் மற்றும் பிரதிநிதிகளையும் சந்தித்த சந்தர்ப்பங்கள் | 88 |
| 09 | பிரதம அமைச்சரின் விடயப்பரப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய அச்சு ஊடகங்களில் வெளியாகிய அறிக்கைகளையும் மற்றும் சமூகப் பொருளாதார பிரச்சினைகள் பற்றிய செய்திகளையும் மற்றும் இணையத்தளத்தில் வெளியாகிய செய்திகளையும் ஒரு கோவையாக தொகுத்து பிரதம அமைச்சருக்கும் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்கும் அனுப்பி வைத்தல் | 84 |

| | ஊடகப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்ட கூட்டங்கள், வைபவங்கள் மற்றும் பிற பணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 10 | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள செய்திகளை இற்றைப்படுத்துதல் | 464 |
| 11 | ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களை இற்றைப்படுத்துதல்<br>i. Face book<br>ii. You Tube<br>iii. Tiktok<br>iv. Instagram | <br><br>835<br>27<br>50<br>186 |
| 12 | செய்திகளை பின்னூட்டல் செய்த சந்தர்ப்பங்கள்<br>i. இலத்திரனியல் செய்திகள்<br>ii. தொலைக்காட்சி அலைவரிசைகள்<br>iii. இணையத்தளம், ப்லொக் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் | <br>3581<br>1846<br>9383 |
| 13 | பிரதம அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளை அணவல் செய்தல் (ஊடகங்களுக்கு வெளியிடப்படாதவை) | 57 |
| 14 | ஊடகப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 11 |
| 15 | மொழிபெயர்ப்பு<br>i. ஆங்கிலம்<br>ii. சிங்களம் | <br>409<br>419 |
| 16 | அலரி மாளிகை வளாகத்தைப் பார்வையிடுவதற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களை அணவல் செய்தல். | 59 |

## 2.9 சட்டப் பிரிவு

இந்தப் பிரிவு கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்பினுள் வருகின்ற பல்வேறு சட்ட விடயங்களையும் மற்றும் கௌரவ பிரதம அமைச்சரால் வகிக்கப்படும் அமைச்சரவை அந்தஸ்துடைய பிற அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் (கல்வி அமைச்சு, அமைச்சரவை அலுவலகம் மற்றும் நியதிச்சட்ட சபைகள்) தொடர்பான சட்ட விடயங்களையும் இந்தப் பிரிவு ஒருங்கிணைப்பு செய்கின்றது.

இதற்கு மேலதிகமாக, உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்கள் என்பவற்றில் பிரதம அமைச்சரை மற்றும்/அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய பிற தொடர்புடைய தரப்புகள் ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்புகளை இப்பிரிவு மேற்கொள்கின்றது. கௌரவ பிரதம அமைச்சர் கலந்து கொள்ளும் சட்ட விடயங்கள் தொடர்பான கூட்டங்கள், விஷேட சந்திப்புகள் ஆகியவற்றுக்குத் தேவையான வகையில் செயற்படுதல் மற்றும் கௌரவ பிரதம அமைச்சரினால் சமர்பிக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாக தேவைகேற்ப பணிகளை ஆற்றுவதும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் உள்ள வழக்கு கோப்புகள் மற்றும் தொடர்புடைய வழக்குகள் குறித்த விரிவான அறிக்கையை சனாதிபதி அலுவலம் கோரியுள்ளதுடன் இந்த நிறுவனம் தொடர்பான 101 உயர் நீதிமன்ற வழக்குகள் மற்றும் 68 மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் குறித்த விரிவான முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு சனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான காலஎல்லைக்குள் சட்டப் பிரிவுக்குக் கிடைத்த பின்வரும் வழக்குகள் தொடர்பான அழைப்பாணைகள் மற்றும் குறித்த நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- உயர்நீதிமன்ற வழக்குக் கோவைகள் - 25
- மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோவைகள் - 09

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வழக்குக் கோவைகள் தொடர்பான அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய வரைவுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின்போது,

கௌரவ சட்டமா அதிபருக்கு அவதானிப்புகளும் மற்றும் பதில்களும் பெற்றுக்கொடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

